5

# கால்நடைகளின் ஸகாத்



**கால்நடைகள்**

ஒட்டகம் மாடு ஆடு

## கால் நடைகளுக்குரிய சகாததுக்குரிய சட்டம்

அது வாஜிபாகும். நபியவர்கள் கூறினர்கள் «ஒருவருக்கு ஒட்டகமோ மாடோ ஆடோ இருந்து அவற்றுக்கான ஸகாத்தை அவர் நிறைவேற்றவில்லையாயின், மறுமை நாளில் அவை ஏற்கெனவே இருந்ததைவிடப் பெரியனவாகவும் கொழுத்தவையாகவும் வந்து அவரைக் கொம்புகளால் முட்டும்; கால் குளம்புகளால் மிதிக்கும். (என்பது கென்டுதல்) அவரை இறுதிப் பிராணி மிதித்துவிட்டுச் சென்றதும் மீண்டும் முதல் பிராணி அவரை மிதிக்கவரும். இந்நிலை மக்களிடையே இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் வரை நீடிக்கும்» (ஆதாரம் முஸ்லிம்).

## கால் நடைக்குரிய ஸகாத் கடைமையாவதற்கான நிபந்தனைகள்

01-அதனை சொந்தமாக்கி கொண்டதிலிருந்து ஒரு வருடம் சென்டிருக்க வெண்டடும். நபி ஸல் அவர்கள் கூறினார்கள்: «பொருளாதாரத்திலே வருடம் பூர்த்தியாகாமல் சகாத் இல்லை» (ஆதாரம் இப்னு மாஜா).

## பொருளடக்கம்


கால்நடைகளை பற்றிய வரைவிலக்கனம்

கால்நடைகளின் ஸகாத் சட்டம்

கால்நடைகளில் ஸகாத் கடமையாவதற்கான நிபந்தினைகள்

கால்நடைகளின் ஸகாதின் மார்க்க அளவு

ஒட்டகத்தின் பங்கின் அளவு

மாட்டின் பங்கின் அளவு

ஆட்டின் பங்கின் அளவு

ஸகாத் பொருளின் கட்டாயமான தன்மை




www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



*02-மேயக்கூடிய இருக்க வேண்டும். நபி ஸல் அவர்கள் கூறினார்கள்: «மேயக்கூடிய ஒவ்வொரு 40 ஒட்டகங்களுக்கும் ஒரு இப்னு லபூன் கொடுக்க வெண்டும்» (ஆதாரம் நஸாயி).*

*ஸாயிமா ஒட்டகம் - என்பது பூமியிலுள்ள தாவரங்களை மேயக்கூடியதாக இருக்க வேண்டும். ஆகுமாகன புல் என்பது ஒருவர் அதனை பராமரிக்காமல் இயற்கையாக வளர்ந்ததாகும். ஒருவர் பராமரித்த புள்ளை உணவாக உட்கொண்டால் அந்த பிராணியில் சகாத் இல்லை.*

*03-அதனுடைய பாலிருந்தும் சந்ததியிலிருந்தும் பிரயோசனம் பெரக்குடியதாக இருக்க வேண்டும். வேலைகளுக்கு பயன்படுத்த கூடியதாக இருக்க கூடாது.*

வேலைக்கு பயன்படுத்த கூடிய ஒட்டகம் என்பது ஒட்டகட்துக்குரிய சொந்தகாரன் அதனை விளைச்சளுக்கோ அல்லது தண்ணீர் புகட்டயோ அல்லது பொருட்களை எடுத்து செல்லவோ அல்லது பொருட்களை ஏற்றுவதற்கோ பயன்படுத்துவதாகும்.

*வேலைக்கு பயனபடுத்த கூடிய ஒட்டகத்தில் சகாத் இல்லை. ஏன் என்றால் ஆடைஅய போன்ற அடிப்படை தேவைகளுக்க பயன்படுகிறது. அது வாடைகடகு விடப்பபட்டால் கிடைக்க கூடீய வருமானத்தில் வருடம் பூர்த்தியானால் சகாத் கடமையாகும்.*

*3-கால்நடைகள் ஸகாத்தின் அளவை அடைந்திருத்தல்.*



# கால் நடைகளின் ஸகாத்துக்கான மார்க்க அளவு

## முதலாவது - கால் நடைகளின் ஸகாத்துக்கான மார்க்க அளவு

*«நான் பஹ்ரைனுக்கு (ஆளுநராக) அனுப்பப்பட்டதும் அபூ பக்ர்(ரலி) எனக்குக் கடிதம் எழுதினார். அதில், 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம் இது அல்லாஹ் தன்னுடைய தூதருக்கு ஏவி அவர்கள் முஸ்லிம்களின் மீது கடமையாக்கிய ஸகாத் (பற்றிய விவரம்) ஆகும். முஸ்லிம்களில் யாரும் கணக்குப்படி ஸகாத் கோரப்பட்டால் அதை வழங்கவேண்டும். கணக்குக்கு மேல் கொண்டுவரப்பட்டால் கொடுக்க வேண்டாம்.*

*நான்கு ஒட்டகங்கள் அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் ஒவ்வொரு ஐந்து ஒட்டகத்திற்கும் ஓர் ஆடு ஸகாத் கொடுக்க வேண்டும். இருபத்தைந்து ஒட்டகம் முதல் முப்பத்தைந்து வரை ஒரு வயது பெண் ஒட்டகம், (பின்து முகால் என்பது ஒரு வயது பூர்த்தியானது) முப்பத்தாறு முதல் நாற்பத்தைந்துவரை, இரண்டு வயது பெண் ஒட்டகம் (பின்மு லபூன் என்பது இரண்டு வயது பூர்த்தியானது), நாற்பத்தாறு முதல் அறுபது வரை மூன்று வயதுள்ள, பருவமான பெண் ஒட்டகம், (ஹிக்கா என்பது மூன்று வயது பூர்த்தியானது) அறுபத்தொன்றிலிருந்து எழுபத்தைந்துவரை நான்கு வயது பெண் ஒட்டகம், (ஜந்ஆ என்பது நான்கு வயது பூர்த்தியானது) எழுபத்தாறிலிருந்து தொன்னூறு வரை இரண்டு வயதுள்ள இரண்டு பெண் ஒட்டகங்கள், தொன்னூற்றொன்றிலிருந்து நூற்றியிருபதுவரை மூன்று வயதுள்ள, பருவமடைந்த இரண்டு பெண் ஒட்டகங்கள் ஸகாத்தாகும். நூற்றியிருபதுக்கும் அதிகமாகிவிட்டால் ஒவ்வொரு நாற்பது ஒட்டகங்களும் பெண் ஒட்டகம் ஒன்று ஒவ்வொரு ஐம்பதுக்கும் மூன்று வயது பெண் ஒட்டகம் ஒன்றும் ஸகாத்தாகும்.*

*நான்கு ஒட்டகங்கள் மட்டுமே உள்ளதோ அவற்றிற்கு ஸகாத் - இல்லை - உரிமையாளர் நாடினாலே தவிர! அவை ஐந்து ஒட்டகங்களாகிவிட்டால் அதற்குரிய ஸகாத் ஓர் ஆடாகும்36. (செம்பரி ஆடில் ஆறு மாதம் பூர்த்தியான ஐந்ஆவும் நாட்டு ஆடில் ஒரு வருடம் பூர்த்தியானதும் கொடுக்க வேண்டும்.)»(புகாரி)*

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



## ஒட்டகத்தின் பங்கும் ஸகாத்தும்

| ஒட்டகத்தின் எண்ணிக்கை | கட்டாயமான ஸகாத்தின் அளவு |
|---|---|
| 5: 9 | ஒரு ஆடு |
| 10: 14 | இரண்டு ஆடு |
| 15: 19 | மூன்று ஆடு |
| 20: 24 | நான்கு ஆடு |
| 25: 35 | பின்து முகால் என்ற ஒட்டம் (ஒரு வயது பூர்த்தியானது) |
| 36: 45 | பின்து லபூன் (இரண்டு வயது பூர்த்தியானது) |
| 46: 60 | ஹிக்கா (மூன்று வயது பூர்த்தியானது) |
| 61: 75 | ஜிந்ஆ (நான்கு வயது பூர்த்தியானது) |
| 76: 90 | இரண்டு பின்து லபூன் |
| 91: 120 | இரண்டு ஹிக்கா |
| 120:.... | ஒவ்வொரு நான்கும் ஒரு பின்து லபூன் , ஒவ்வொரு ஐந்துக்கும் ஒரு ஹிக்கா. |

## இரண்டாவதாக : மாட்டின் அளவும் ஒவ்வொரு அளவிற்கும் கொடுக்க வேண்டிஎ அளவும்.

முஆத் ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள் : «நபி ஸல் அவர்கள் என்னை யமனுக்கு அனுப்பிய போது ஒவ்வொரு 30 மாட்டுக்கும் ஒரு தபிஆவையும் 38 ஒவ்வொரு (தபீஆ மாட்டில் ஒரு வயது பூர்த்தியபனது) மாட்டுக்கும் ஒரு முசன்னாவை (இரண்டு வருடம் பூரத்தியானது.) எடுங்கள் என்று ஏவினார்கள்» (ஆதாரம் அபூதாவுத்).

## மாட்டிற்குரிய ஸகாத்தின் அளவு

| மாட்டின் எண்ணிக்கை | அதில் கட்டாயமான அளவுகள் |
|---|---|
| 30: 39 | தபீஃ (ஒரு வளது பூர்த்தியடைந்த மாடு) |
| 40: 59 | முசன்னா ( இரண்டு வயதுடையது) |
| 60: 69 | இரண்டு தபிஃ |
| 70: 79 | தபீஃ ஒனறும் முசன்னா ஒன்றும் |

## மூன்றாவதாக : ஆட்டின் அளவும் ஒவ்வொரு அளவிற்கும் கொடுக்க வேண்டிஎ அளவும்.

«காடுகளில் மேயும் ஆடுகள் நாற்பதிலிருந்து நூற்றியிருபது வரை இருந்தால், அதற்கு ஸகாத் ஓர் ஆடாகும். நூற்றியிருபதுக்கு மேல் இரண்டு நூறு வரை இருந்தால் இரண்டு ஆடுகளும் இருநூறுக்குமேல் முன்னூறு வரை மூன்று ஆடுகளும் முன்னூறுக்கும் அதிகமாகிவிட்டால் ஒவ்வொரு நூறுக்கும் ஓர் ஆடும் ஸகாத்தாகும். காடுகளில் மேயக் கூடிய ஆடுகளில் நாற்பதில் ஒன்று குறைந்துவிட்டாலும் உரிமையாளன் நாடினாலே தவிர அதில் ஸகாத் இல்லை. வெள்ளியில் நாற்பதில் ஒரு பங்கு ஸகாத் கொடுக்க வேண்டும். அதில் நூற்றுத் தொண்ணூறு திர்ஹம் மட்டுமேயிருந்தால் உரிமையாளன் நாடினாலே தவிர ஸகாத் இல்லை.»(ஆதாரம் புஹாரி).

## ஆடுகளின் ஸகாத்தும் பங்குகளும்.

| ஆடுகளின் எண்ணிக்கை | அதில் கட்டாயமான ஸகாத்தின் அளவுகள். |
|---|---|
| 40: 120 | ஒரு ஆடு |
| 121: 200 | இரண்டு ஆடுகள் |
| 201: 300 | மூன்று ஆடுகள்கள்; (ஒவ்வொரு நுறும் அதிகரிக்கும் போது ஒவ்வொரு ஆடு அதிகரிக்கும்) |



www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



www.al-feqh.com/ta

## கட்டாயமாகுவதற்கான பண்புகள்

சொத்துக்களில் நடுநிலையானவற்றை ஸகாத் கொடுக்க வேண்டும். மிகச் சிறந்ததையோ அல்லது தாழ்ந்ததையோ கொடுக்கக்கூடாது. கால் நடைகளை வழங்குபவர் எந்த வயதுள்ள பிராணியை கொடுப்பது அவசியமே அதனை கொடுக்க வேண்டும். அது அவரிடம் இல்லாதுவிட்டால் அதில் குறைந்ததை கொக்கலாம். அப்படியில்லாத போது அது ஏழைக்கு செய்யும் தீங்காக மாறும். அதே போல அவர்களுக்கு மிக மிக உயர்ந்ததை வழங்கவும் முடியாது அது வசதியுள்ளசர்களுக்கு செய்யும் தீங்காகும். நோயுள்ள, குறையுள்ளவற்றை கொடுப்பதால் ஏழைகளுக்கு எந்த பிரயோசனங்களும் கிடைக்கப் போவதில்லை. அதே போல கற்பிணியான, கொழுத்த, குறைகளே அற்றவற்றை, குட்டியோடு உள்ளவற்றை கொடுப்பது வசதியுள்ளவர்களுக்கு தீங்காக, அநீதியாக மாறுகின்றது. நபியவர்கள் கூறினார்கள்" «அவர்களின் சொத்துகளில் மிக சிறந்ததில் ஸகாத் எடுப்பதை உனக்கு எச்சரிக்கின்றேன் »(ஆதாரம் புஹாரி ).

## கால் நடையில் கூட்டாக கொடுத்தல்

அது இரு வகைப்படும்.

### முதலாவது வகை: தனிப்பட்ட முறையில் ஒன்றுசேர்தல்

சொந்தத்தில் இருவரும் சேர்ந்திருக்க வேண்டும், அவர்களுக்கு மத்தியில் அறியப்பட்டதாக இருக்க வேண்டும், ஒருவருக்கு குறிப்பாக இருக்ககூடாது, குறிப்பிடப்பட்ட பங்கு வராசத்திலிருந்து இருக்க வேண்டும் மேலும் வியாபாரத்திலிருந்து இருக்க

வேண்டும்.

### இரண்டாவது வகை: பலதரப்பட்ட முறையில் ஒன்று சேர்தல்

அவர்கள் ஒவ்வொருவரும் பிரிந்துள்ளதை அறிந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் பக்கத்தில் ஒன்று சேர்ந்ததாக இருக்க வேண்டும்.

இருவருடை பனமும் கடைமையாகும் அளவை அடைந்தால் ஒருவரின் பணமாதிரி இருவருடைய பணத்தையும் சேர்க்க வேண்டும்;.

இருவரும் ஸகாத் கடைமையாகுவர்பளில் இருக்க வேண்டும்.

அவர்களில் ஒருவர் காபிராக இருந்தால் அவ்வாறு சேர்வது கூடாது. அப்படியானவற்றில் எவ்வித பிரயோசனங்களும் கிடையாது.

இருவருடைய பணமும் வைக்ககூடிய இடத்தில் வந்டு சேருமிடத்தில் ஒன்றாக இருக்க வேண்டும், ஒன்று சேறும் இடம் ஒன்றாக இருக்க வேண்டும். ஒன்றாக திரும்ப வேண்டும்ளூ பால் கரக்கும் இடம், மேய்க்கும் இடம், காளை மாடு ஒன்றாக இருக்க வேண்டும். இவ்வாரான நிபந்தனைகளை உள்ளடக்கி இருந்தால் அது ஒருவரின் பணத்தை போன்று ஒரு பங்கு கொடுக்க முடியும்.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள்:«ஸதகாவை பயந்து பிரிநிதை ஒன்று சேர்க்கவும் முடியாது ஒன்று சேர்த்ததை பிரிக்கவும் முடியாது.

கூட்டு ஸகாத் ஒன்று சேர்ப்பதற்கும், பிரிப்பதற்குமிடையில் எந்த வித்தியாசமும் கிடையாது. (ஆதாரம் – இப்னு ஹூஸைமா »(ஆதாரம் இப்னு ஹூஸைமா).

பிரித்ததை ஒன்று சேர்ப்பதற்கு உதாரணம்: நான்கு நபர் சேர்ந்து ஒவ்வொருவருக்கும் 40 ஆடுக்கு இனங்க மொத்தமாக 120 ஆடுகள் இருந்தன. ஒவ்வொருவரா கணக்கிட்டால் அவர்கள் 3ஆடு கொடுக்க வேண்டும்ளூ மொத்தமாக கணக்கிட்டால் 1ஆடு கொடுக்க வேண்டும். இது கூடாது.

ஒன்று சேர்ந்ததை பிரிப்பதற்கு உதாரணம்: ஒருவரிடத்தில் 40 ஆடுகள் இருக்கிறது. ஸகாத் எடுப்பவர் வருகிறார் என்பதை தெரிந்த போது அதனை 20 வது 20 வதாக இரண்டாக பிரித்து விட்டார். இதன் மூலம் அவர் கடமையான அளவை அடையவில்லை என்று ஸகாத் வசூலிப்பவர் ஸகாத் ஏற்றுக் கொள்ளமாட்டார்.. இதுவும் கூடாது.